தருமபுரி மாவட்ட வெள்ளி விழா

தருமபுரி மாவட்டச்

சமூகப் பொருளாதார வரலாற்றுக்

கருத்தரங்கம

Socio Economic Survey of

Salem and Dharmapuri

Districts

The report of Col. Alex Read

நூல் வெளியீட்டு உரை

01—10—1989

Thiru. R. RATHINASAMY, I.A.S.,
Collector, DHARMAPURI.

அறிஞர்களே ! பெருமக்களே !

தருமபுரி மாவட்டம் பழங்கற்காலம் முதல் ஒவ்வொரு வரலாற்றுக் காலத்தையும் வெளிப் படுத்தும் வரலாற்றுச் சின்னங்கள் மலிந்த மாவட்டம் ஆகும். இவை தமிழ் மக்களின் பண்பாட்டினை விளக்கும் அரிய சின்னங்கள். தமிழக வரலாற்றினை எழுத முனைவோர்க்குத் தருமபுரி மாவட்டம் அரிய செய்திகளை வழங்கும் வளமுடையது.

இந்த மண்ணில் தோன்றிய அதியமான் நெடுமான் அஞ்சி பெருவீரனாகத் திகழ்ந்தான். இவனே கரும்பினைத் தமிழகத்திற்கு முதல்-முதலாகக் கொண்டுவந்து அறிமுகப் படுத்திய வன். இவன் காலத்தே வாழ்ந்த தமிழ் மூதாட்டி ஔவைக்கு அரிய நெல்லிக்கனியைத் தந்து அப்புலவர் வாயால் 'நீலமணி மிடற்று ஒருவன்போல மன்னுக பெரும' எனவாழ்த்தப் பெற்றான். இந்த அருஞ்செயலே அதியனை வள்ளல்களில் ஒருவனாய் இன்றும் வாழ வைக்கிறது.

நடுகற்களையும், ஆதிகாலக் குகை ஓவி-யங்களையும் கொண்டுள்ள தருமபுரி மாவட்-டத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, ஹொய்சாளர், நாயக்கர், ஆங்கிலேயர் போன்ற அரசுகளின் சுவடுகளைக் காண்கிறோம் தருமபுரி மாவட்டம் இன்றும் பேரளவில் ஆதி வாசிகள் நிறைந்த பகுதியாகவே உள்ளது. தருமபுரியைச் சார்ந்த தொப்பூர்க் கணவாய் மிக அதிகமான போர்களைக் கண்ட பகுதி. இவ்வாறு வரலாற்றின் பல துறைகளுக்கும் சான்று தந்து நிற்பது தருமபுரி மாவட்டம்.

வீரமும் விவேகமும், புலமையும், புகழும் வாய்ந்த தருமபுரி மாவட்டத்தின் 25-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 'தருமபுரி மாவட்டச் சமூகப் பொருளாதார வரலாற்றுக் கருத்தரங்கமும், இம்மாவட்டத்தைப் பற்றிய 'கர்னல் ரீடு' அவர்களின் அறிக்கை (Survey Report) நூல் வெளியீடு நிகழ்வதும் மிகவும் பொருத்தமானதாகும். இத்தகைய ஆய்வ-ரங்கங்களும், கர்னல் ரீடு போன்றவர்களின் வரலாற்று மூல நூல்களும் தருமபுரியின் வரலா றும் பண்பாடும் உலகமெங்கும் பரவ அடித் தளம் அமைக்கும் என்பதில் ஐயமில்லை.

கர்னல் ரீடு 1792-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாள் காரன்வாலிஸ் பிரபுவால் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கண்காணிப்பாளராக (Collector and Superin-dent of Salem District) நியமிக்கப்பட்டார். ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்ட இந்தப் பகுதி யில் நிலவரியை நிர்ணயம் செய்வதற்காகவே இவரால் நில அளவை மேற்கொள்ளப்பட்டது என்றாலும் நிலவரியை நிர்ணயிக்க நிலத்தைப் பற்றி மட்டுமின்றி அதனொடு சார்புடைய இயற்கைச் சூழல், மக்கள் போன்ற புள்ளி விவரங்களும் இன்றியமையாதன; கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியன என்று உணர்ந்து அதற்கான விவரங்களையும், புள்ளி விவரங்களையும் அரிதில் முயன்று அமைத்து உள்ளார். இந்நூலில் காணப்படும் சொற்கள் அளவுகள், வணிகம் பற்றிய குறிப்புகள் இப்-பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை நாம் உணர்ந்துகொள்ளும்படியாக உள்ளன. சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் இந்தப் பகுதியில் வழக் கிலிருந்த உணவுப் பொருள்கள், வணிகம், வணிகத் தலங்கள் போன்றவற்றையும் இம் மண்ணில் உள்ள கனிவளம், காற்று, நோய். பூமி, தண்ணீர் போன்றவற்றைப் பற்றிய ஆய்வுக் குறிப்புகளும் வரலாறு, சமூக இயல், மொழி இயல் ஆய்வாளருக்குப் பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

திரு. பக்கிள் (Mr. Puckle) அவர்கள் இந்த அறிக்கை மிக முழுமையானதாகவும், பெரும் திறமையுடன் ஆராய்ந்தும் எழுதப்பட்ட போதிலும், இந்த அறிக்கையில் காணப்படும் தமிழ், கன்னடம், இந்துஸ்தானி ஆகிய மொழிச் சொற்களும், இன்று நமக்குக் கிடைக்கும் நிலப் படத்தை ஒட்டி நோக்கும்போது பயனற்று நிற்கும் வரைபடங்களும், வேண்டாத விவரங்களும் நிறைந்து இந்நூல் மேற்கோள் என்னும் தகுதியை ஏறத்தாழ இழந்துவிட்டது என்று குறிப்பிடுகிறார். அவரே இந்த அறிக்கையில் காணப்படும் பரப்பு, தானியம், பணம் ஆகியவற்றை ஆங்கில முறையிலாத் தாய்மொழிச் சொல்லுக்குப் பதில் ஆங்கிலச் சொல்லைத் தந்து, அறிக்கையின் விரவிக் கிடக்கும் காலமுறை, நோய், பொருள்கள், பூமி, தண்ணீர், காற்றுப் போன்றவற்றைக் களைந்து அறிக்கையைச் சுருக்க முயன்றிருக்கிறார். ஆனால் இந்த விவரங்கள் மிக நுட்பமாக ஆதாரங்களொடு விஞ்ஞான ரீதியாக ஆய்ந்தெடுக்கப்பட்ட தகவல்கள் என்பதை நாம் உணரவேண்டும்.

எவை எல்லாம் திரு. பக்கிள் (Mr. Puckle) அவர்களால், அறிக்கைக்குத் தேவையில்லை என ஒதுக்கப்பட்டுள்ளனவோ அவையெல்லாம் இம்மாவட்டத்தின் சமூக நிலை, சூழ்நிலை, மொழி, இயற்கையமைப்பு போன்ற பலதிற வரலாற்றுக் கூறுகளை விளக்குவனவாக உள்ளன என்பதே உண்மையாகும். ஆகவே 'அறிக்கை' என்ற நிலையிலிருந்து உயர்ந்து இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாகவே திகழ்கிறது என்பதே சரியான மதிப்பீடாகும்.

"கர்னல் ரீடு அவர்களின் பணியில் குற்றம் காணல் எளிது என்றாலும், அந்த மதிப்பீடு மிகவும் தாழ்ந்தது. ரீடும் அவர்களது உதவியாளர்களும் சில தவறுகள் செய்திருந்த போதிலும், மிகநுட்பமான பெரிய அளவிலான புள்ளி விவரங்களைத் தொகுக்கும் போது இவை நேர்வன இயல்பே என்று கொள்ளவேண்டும். இவர்கள் எவ்வளவு அதிகமாகத்தவறு செய்திருக்கிறார்களோ அத்தவறுகளை அவர்கள் அவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்பதே வியப்புக்குரியதாகும்" என்று ரிச்சர்ட்ஸ் அவர்கள் குறிப்பிடுவது மிகவும் சரியான மதிப்பீடே எனலாம்.

இந்த அறிக்கையைப் பற்றி ரிச்சர்ட்ஸ் குறிப்பிடும்போது கர்னல்ரீடு அவர்களின் மதிப்பீட்டு முறைகள் (Methods of assessment) மிகுந்த ஆர்வமூட்டுவன; இன்றியமையாதன ஏனென்றால் ரயத்துவாரி முறையின் அனைத்துக்கருவும் இதில் அடங்கியுள்ளன என்று குறிப்பிடுகிறார். இத்தகைய சிறப்பு வாய்ந்த அறிக்கையை நூலாக வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கர்னல் ரீடு அவர்களின் அறிக்கையைப் போலவே கர்னல் ரீடும் மிகவும் உயர்ந்தவராக வாழ்ந்திருக்கிறார். சர்வே பணியில் ஈடுபட்டு வெற்றிகரமாக அந்தப் பணியை முடித்த திரு. மாதர் (Mr. Mather) அவர்களைக் கர்னல் ரீடு மனமாரப் புகழ்ந்துரைக்கிறார். தனி மனிதனாகக் காட்டிலும் மலையிலும் ஆறுகளிலும் வயல்களிலும் மலைக் காய்ச்சலையும் சகித்துக் கொண்டு, இந்த அரிய பணியைத் திரு. மாதர் செய்து முடித்ததைப் பாராட்டும்போது 'ஒரு தனி மனிதன் தன்னைப் பணியில் அமர்த்தியவர்க்கு எந்த அளவு உழைக்க முடியும் என்பதற்கு இந்தப் பணி ஒப்பில்லாச் சான்றாக விளங்குகிறது' என்று குறிப்பிடுகிறார். இந்த அரியபணியில் தன்னுடைய பங்கினைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'தன்னால் இத்திட்டத்தைத் தோற்றுவித்து, அது தானே செயற்படச் செய்தது மட்டுமே' என்று பணிவுடன் கூறும் எளிமையும், பணியாற்றியவரைப் பாராட்டும் பணிவும் கர்னல் ரீடு ஒரு மாமனிதர் என்பதை விளக்கி நிற்கின்றன.

கர்னல் ரீடு அவர்களின் நிலவரிக் கோட்பாடு அவர்க்கு மேலதிகாரியாக இருந்த நிலவரி கழகத்தால் (Board of Revenue) ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதுபோலவே அவர் தலைமையில் பணியாற்றிய திரு. மன்றோவுக்கும் உடன்பாடாக இல்லை என்றாலும், கர்னல் ரீடு தனது கொள்கையில் நிலையானவவராக இருந்தார். படிப்படியாகத் தெளிவு பெற்ற மன்றோ ஒரு காலத்தில் கர்னல் ரீடு அவர்களின் கோட்பாடே சரியானதென உணர்ந்தார்.

ரீடுவின் நிலவரித் தீர்மானம் ரயத்துவாரிச் சட்டத்தின் அனைத்துக் கருவையும் கொண்டிருந்தது. அவரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த மன்றோ, கர்னல் ரீடுவின் கருத்து சரியானதென ஏற்றுக்கொண்டு, பின்னர் அதனைச் செழுமைப் படுத்தினார். அதனை அரசும் ஏற்றது. இவ்வாறு தனது மேலதிகாரிகளும், தன் கீழ்ப் பணியாற்றியவர்களும், தன் கருத்துக்கு முரண்பட்டு நின்ற போதும், தன் கொள்கை நியாயங்களைக் கூறி அவர்கள் அதனை ஏற்கும்படிச் செய்த அவரது பொறுமையும் திறமையும் அவர் கொண்டிருந்த தெளிவும் அறிவுமே அவரை மிகவுயர்ந்த அலுவலராக மட்டுமின்றி உயர்ந்த மனிதராகவும் விளங்கச் செய்கின்றன எனலாம்.

கர்னல் ரீடு மிகவும் யதார்த்தமானவர். சூழ்நிலையை நன்கு உணர்ந்தவர். நிலவரித் தீர்மானத்திற்கு அவர் கடைப்பிடித்த கொள்கைகளும், (Principles) அணுகுமுறையும் மிகவும் சிறந்தவை. விஞ்ஞான முறையில், அவர் பிரச்சினைகளை அணுகித் தீர்வு காண முயன்றுள்ளார். போரினால் நொந்து போயிருந்த மக்கள், அரசிடம் ஈடுபாடும் நம்பிக்கையும் வைத்துப் பணியாற்ற வேண்டுமென்றால் அவர்கள் தன்னம்பிக்கை பெறுமாறு பணிகளை ஒழுங்குபடுத்துவதன் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டார். அவர் தான் மட்டுமே முடிவிற்கு வராமல், அனைத்துத் தரப்பினர் கருத்தினையும் ஏற்று, அனைவரும் ஏற்கும்படியான ஒரு சிறந்த முடிவிற்கு வந்தவர் கர்னல் ரீடு. கர்னல் ரீடுவின் ஒவ்வொரு பணியும் அணுகு முறையும் கர்னல் ரீடு சிறந்த போர் வீரர் மட்டுமல்ல; சிறந்த நிர்வாகி மட்டுமல்ல; சிறந்த விஞ்ஞானி என்பதை மெய்ப்பிக்கின்றன.

நில வரியை நிர்ணயம் செய்ய நிலம், உற்பத்தி, உழைப்பு, சமூகப் பங்கு (Social shares) உற்பத்திக் காரணிகளான இயற்கை அமைப்பு, தண்ணீர், காற்று என்றுஅனைத்துக் கூறுகளையும் அவர் கருவிகளாகக் கொண்டு அளந்து வரையறுக்க முயன்றார். அரசியல் பொருளாதாரம், (Political economy) சமூகப் பொருளாதாரம் (Social economy) இயற்கைப் பொருளாதாரம் (Natural economy) என்ற பகுப்புக்களை அவரதுதேடலில் காண்கிறோம். இவை அவரது பரந்த பொருளாதார ஞானத்தையும், அவரது சமூக உணர்வினையும் காட்டுவன.

இத்தகைய சிறந்த சமூக விஞ்ஞானி தருமபுரி—சேலம் மாவட்டத்தைப் பற்றி ஆய்ந்து எழுதிய கருத்துக்கள் இந்த மாவட்டத்தின் வரலாற்றுக்கும் வளர்ச்சிக்கும் பெரும் துணை புரியும். அத்தகைய நூலை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருமகள், தருமபுரி-1. போன் : 6247

திரு.எம்.வடிவேலு, பி.ஏ.,
தலைவர்,
மாவட்டச் சிறுதொழில் சங்கம்,
தருமபுரி 636 701.

"தருமபுரி மாவட்ட தொழில் வளம் ஒரு மதிப்பீடு."

அதியமான் ஆண்டு அறம் வளர்த்த நாடு — அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த இறவாப் புகழ் பெற்ற நாடு — தருமம் புரிந்த — புரிகின்ற நாடு — இன்று பல நிலையில் தருமம் புரிவதோடு தருமம் கேட்கின்ற நிலையிலும் உள்ள நாடு —

மாமரத்தில் இருந்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றைப் பிரித்தது போல் சேலத்தில் இருந்து 2.10.65 இல் தருமபுரி பிரிக்கப்பட்டுத் தனி மாவட்டமாக அமைந்து 24 ஆண்டு முடிந்து 25 ஆம் ஆண்டுத் தொடங்கிய தருமபுரி மாவட்டம், எட்டுத் தாலுக்காக்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்த அருமையான இயற்கை சூழலுடன் கூடிய மாவட்டம் — இங்கு மலைவளம் உண்டு — காட்டு வளம் உண்டு — நில வளம் உண்டு — நீர் வளம் உண்டு — நெல் வளம் உண்டு — பல்வேறு தொழில் புரியத் தகுந்த அருமையான தட்ப வெப்ப நிலை உண்டு — அண்டை மாநிலங்களை அருகே அமைந்துக் கொண்ட புகழ் உண்டு — அதன் மூலம் பொருளும் உண்டு; மாவட்டமெங்கும் பெருகி உழைத்தவாழும் உள்ளங் கொண்ட நன்மக்கள் உண்டு; ஓரளவு கல்வியுண்டு — இதுதான் தர்மபுரி மாவட்டம்.

1. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள்;

பால், பட்டு—பருத்தி, பழவகைகள், கரும்பு, கடலைத் தோல் — அரிசி—மாவுமில்த் கையால் நூல் இழைத்தல் — ராட்டையால் முறுக்கேற்றுதல் — கையால் தோல் பதனிடுதல், போன்ற பழமையான தொழில்கள் இங்கொன்றும், அங்கொன்றும் பரவலாக இம்மாவட்டம் முழுவதும் அமைந்து இருந்தன. ஆனால் தனி மாவட்டம் அமைந்த பிறகு

...2/.

இந்தப் பழமையான ஆனால் அன்றாடம் பயன்படுகின்ற பாங்குள்ள தொழில்கள் சிறுகு சிறிதாக வளர்ந்து மாவட்டம் முழுவதும் பரவலாக இன்னும் சொல்லப் போனால் கிராமந்தோறும் உண்டாகி வளர்ந்திருக்கிற சூழ்நிலையை நாம் வரவேற்க வேண்டும்.

முன்பெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் விலைபொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்குக் கொண்டு வந்துதான் நெல்லை அரிசியாகவும்—கேழ்வரகு—சோளம் முதலியவற்றை மாவாகவும்— மற்ற மிளகாய், மஞ்சல், சீயக்காய் போன்றவற்றைப் பொடியாகவும் கடலை, முந்து கொட்டை—எள் போன்றவற்றை எண்ணெய்யாகவும், செய்து கொண்டு சென்றனர். ஆனால் இன்று ஒவ்வொரு கிராமத்திலும் சிறு அறவை மில் இருப்பதைப் பார்க்கிறோம்.

1871—72 காலகட்டங்களில் இந்தச் சூழ்நிலை வளர்ச்சியில் உச்ச நிலைக் காலம் எனலாம். தருமபுரி, திருஉளுகிரி பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டைகள் உருவாயின. தமிழக அரசு சிப்காட் போன்ற தொழிற்பேட்டையையும் அமைக்க முன்வந்து சிறு தொழில், மத்திய தர தொழில், பெருந்தொழில் என மூன்று வகையான தொழில் அமைப்புகளை உருவாக்கி தொழில் முனைவோரின் திட்டத்திற்கேற்ப நிலம்— நீர்—கட்டிடம், இயந்திரங்கள், மின்சாரம், நடப்பு மூலதனம், மற்றும் தொழில் மானியம் போன்ற அடிப்படை வசதிகளைத் தகுதி அடிப்படையில் கொடுத்து ஓசூரை ஒரு பெரிய தொழில் நகராகவே மாற்றி உள்ளது. இந்தத் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்படாத பொருளே இல்லை என்கிற அளவுக்கு சுமார் 900 தொழில்களைத் தன்னகத்தே கொண்டு சுமார் 25,000 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து வருகிற ஒரு நிலையை நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும். இந்த நிறுவனங்களில் தனியார் துறை—தனியார் வரைசெய்த கூட்டுத்துறை, கூட்டுறவுத் துறை, வெளியார்வரையறை செய்த நிறுவனங்கள் அமைப்புகள் மூலம் தனியார் மூலதனமாக சுமார் 35 முதல் 40 கோடி வரையிலும் அரசு உதவி மற்றும் வங்கிகள் உதவியாக சுமார் 200 முதல் 250 கோடியும்

....3/.

உள்ளடக்கி இன்று சுமார் 300 கோடி ரூபாய் வரை இந்த மாவட்டத்தின் தொழிற்துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 50000 குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் பெற்று வந்துள்ளன. இதன்பிறகு 1976-77 கால கட்டத்தில் மாவட்ட வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது. விவசாய மக்கள் அவர்கள் சார்ந்த தொழில்களில் முனைய ஊக்குவிக்கப்பட்டது. பிறகு மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டு, அதன் மூலம் இந்த மாவட்டத்தில் என்ன என்ன தொழில்கள் தொடங்கலாம் என்ற விவரம் அறிகின்ற வாய்ப்பும் சிறு தொழில்கள் மற்றும் மத்தியதரத் தொழில்கள் பதிவு செய்து பராமரிக்கின்ற நிலையும் உருவாக்கப்பட்டு, தொழில் சம்மந்தமான அனைத்துப் பணிகளும் மாவட்டத் தொழில்மையம் மூலமாக முறைபடுத்தப்பட்டுள்ள நிலையும் தற்போது உள்ளது.

1978 வரை தொழில் முனைவோருக்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள் தருமபுரியில் இல்லை. 1978 ஆகஸ்ட் மாதம் தருமபுரி மாவட்டச் சிறுதொழில்கள் சங்கம் அரும்பாடுபட்டு மாவட்டத் தொழில் மையத்தின் கிளை அலுவலகத்தைத் தருமபுரிக்குப் பெற்றது. அந்நிறுவனமும் தொடக்கத்தில் தொழில் சம்மந்தமான கடிதத் தொடர்பும் கடன் வசூல் வேலைமட்டும்செய்து வந்தது. பிறகு, 1979-டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடந்த ஒரு தொழில் கருத்தரங்கத்தில் மாவட்டச் சிறு தொழில் சங்கத் தலைவர் நான் கலந்துகொண்டு நீண்ட விவாதம் செய்து -புள்ளிவிபரங்கள் கொடுத்து டி.ஐ.ஐ.சி -யின் கிளை அலுவலகங்களில் ஒரு குறிப்பிட்டதொகை அனுமதி செய்யும் அதிகாரமும் வழங்க ஆவனசெய்யப்பட்டது. தற்போது தர்மபுரி கிளை அலுவலகத்தில் 3 லட்சம் கடன்பெறும் நிலையும் கோவை மண்டல அலுவலகம் மூலம் 7 லட்சம் கடன் அளவும்- சென்னை தலைமை மாவட்டத்தொழில் மைய அலுவலகத்தில் 60 லட்ச ரூபாய் கடன் பெறுகின்ற நிலையும் இருக்கிறபடியால் தொழில் முனைவோர் தங்களின் தொழிலுக்கேற்பக்கடன் பெறுகிற வசதி எளிதாக்கப்பட்டுள்ளது. பெரிதனக்-காரர்கள் தான் வங்கிகளையும் கடன் நிறுவனங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நிலையை மாற்றி சாதாரண ஏழை - நடுத்தர - படித்த இளைஞர்கள் தங்கள் திட்டத்திற்கேற்ப கடன் பெறுகின்ற தகுதி உண்டாக்கி-யிருப்பதை ஒரு பெரிய சமூக சாதனை என்றே கொள்ள வேண்டும்.

....4/

நமது மாவட்டத்தில் உள்ள சிறு - மற்றும் பெருந் தொழில்கள்:-

1. ஓசூர்: இது ஒரு வட்டம் - இங்கு ஓசூர் இன்ஜினிரிங்-எலக்டிரானிக்-இராசயனம் - உணவுப்பொருட்கள்- பெரும் தொழிலுக்குரிய உதிரிபாகங்கள் செய்யும் தொழிலகங்கள் கடிகாரம்-இரும்பு-அலுமினியம்-செம்பு- பேக்கிங் செய்கின்ற பொருட்கள்-வண்டி வாகனங்கள்- இப்படி பல தொழில்கள் பெருகி ஒரு சிறு தொழில் நகராக இன்று ஒளியிட்டு கொண்டிருக்கிறது. அரசின் கணக்கு படி இது முன்னேறிய வட்டம்- இங்கு மேலும் உதிரி பாகங்களை செய்யக்-கூடிய ஏனை தொழிற்சாலைகள் வர வாய்ப்புள்ளது.

2. தேன்கனிக்கோட்டை:-

இது பட்டு உற்பத்தி-பட்டு நெசவுச் தொழிலும்-செங்கல் ஏடு தயாரிப்பு தொழிலகங்களும் உள்ளடக்கிய ஒரு பகுதியாக இங்கு ஒரு வளரும் வட்டமாக உள்ளது. செழுமையான காட்டுவிளைபொருட்கள் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறபடியால் இங்குக் காகிதம்-பழம்பதனிடுதல்-ஊதுபத்தி- சந்தனபொருட்கள்-குங்குமம் மற்றும் பருத்தி-கிரானைட் தொழிற்-சாலைகள் அமைக்க வாய்ப்பு உண்டு.

3. கிருஷ்ணகிரி:-

இது மாவட்டத்தின் ஒரு முக்கியமான வருவாய் வட்டம்- இங்கு பால், பழவகைகள், கிரானைட், புளி, தோல், பாத்திர உற்பத்தி, நார்த் தொழிலகங்கள் நிறைய கொண்டது. கிரானைட் கட்டிங் பாலிஷிங் மற்றும் இங்கு ஏற்படுத்தினால் இன்னும் இவ்வட்டத்தின் வளரும் வாய்ப்புப் பிரகாசமாக இருக்கும்.

4. பாலக்கோடு:-

இந்த வட்டம் நல்ல நீர்வளம் உள்ள பகுதி. இங்குக்கூட்டுறவுத்துறையில் ஒரு கரும்பு ஆலை உள்ளது-இது தவிர வேறொன்றும் பெரிய அளவில் தொழில் வளம் மிக்கது என்று சொல்லமுடியாது. ஆனால்

.....5/

இந்த வட்டத்தில் தென்னை-கரும்பு-புளி-பழவகைகள்- எண்ணெய்வித்துக்கள்-அதிகமாக உற்பத்தியாகிற காரணத்தால் நீர்வளம் உள்ளதாலும் மேற்கண்ட பொருள்களை அடிப்படையாக்க கொண்டு பல தரப்பட்ட தொழில்கள் தொடங்கவும் நன்கு நடத்தவும் நல்ல வாய்ப்புகள் உள்ளன.

5. பென்னாகரம்:-

இது நீரோட்டமுள்ள ஆனால் நீர்பெற முடியாத வட்டம்-மலைகள் இயற்கை வளங்கள் மிக்க ஒரு வட்டம்-காவேரி அன்னை இந்தப் பக்கம்தான் சலசலத்து ஓடுகின்றாள். கரும்புத் தங்கம் என்று சொல்லும்புகழ் மிக்க உலகெங்கும் மின்னிக் கொண்டிருக்கிற நிலையை பார்க்கிறோம். இவ்வளவு வளம் வாய்ந்த வட்டத்தை வெளியாட்கள் தொழில்புரிந்து வெட்டவெளியாக்கி-சுரண்டிக் கொண்டு போய்விட்டார்கள். இந்தத் தாலுக்காவில் தொழில்கள் என்று சொல்லும் அளவு ஒன்றும் குறிப்பிடும்படியாக இல்லை. தற்போது அரசுத் துறையில் பட்டு வளர்ப்பு-ஆடுவளர்ப்பு-தேனிவளர்ப்பு-போன்ற தொழில் நிலையங்கள் உருவாக்கப்பட்டு மெல்ல வளர்ந்து வருகின்றன. ஒகேனக்கல் நீர்மின்-நிலையம் ஏற்படுத்தும் முயற்சி இன்னும் முற்று பெறாமல் உள்ளது. இது தொடங்கப்பட்டால்-கூட இங்குச் சில ஆலைகள்-சந்தனம் சம்மந்தமாகா தொழிலகங்கள் தொடங்க வாய்ப்புண்டு.

6. தர்மபுரி:-

இது இம்மாவட்டத்தின் தலைநகர்- இங்கு நூற்பு-ஆலைகள்-தீப்பெட்டித் தொழிற்சாலைகள்- பனிமனைகள் அலுமினியத் தகடு மற்றும் பொருள் செய்யும் தொழிலகங்கள் தோல்பதனிடும்-ரசாயனத் தொழில்கள் பிளவர் ரோலர் மில்-அரிசி-மாவு- மற்றும் ஆயில்மில்கள் நிறைய உள்ளன. இந்த மாவட்டத்தில் கற்கள் நிறையக் கிடைக்கின்றன. இங்குப் புது மெட்டல்-மற்றும் கிரானைட் கட்டிங் பாலிசிங் இண்டிஸ்டிரிஸ், பவர்மில் புளி, பழங்கள் மற்றும் தக்காளி பதப்படுத்துதல் போன்ற தொழில்களுக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இங்கு ஓடும் சேலம்-பெங்களூர் ரெயில்தடத்தைப் பிராட்கேஜ்

....6/

செய்து - தர்மபுரியில் இருந்து பழையபடி மொரப்பூருக்கு இணைப்புக் கொடுத்தால் இந்தப் பகுதியில் தொழில் மட்டும் அல்லாது கல்வி, கலாச்சாரம் மற்றும் உற்பத்தி ஆகிய வசதிகள் பெற்று இன்னும் முன்னேற அதிக வாய்ப்பு உள்ளது.

7. அரூர் :-

இது கனிவளம்-காடுவளம், நீர்வளம், நிலவளம்மிக்க பகுதி. சாலவெளிட் எக்ஸ்ட்ராக்ஷன், கிரானைட் பாலிசிங் நடந்து வருகின்றன மரவெள்ளிக்கிழங்கு ஸ்டார்ச் தயாரிக்கும் தொழில் மிகுதியாக நடந்து வருகிறது. இங்குப் புதியதாக ஒரு சர்க்கரை ஆலையும் தொடங்கப்பட்டுள்ளது. இங்கு இதைச்சார்ந்த பல தொழில்கள் உருவாக நல்ல வாய்ப்பு உள்ளது.

8. ஊத்தங்கரை :-

இது ஒரு வறண்ட வட்டம். இங்குப் பருத்தி உற்பத்தி அதிகம். கூட்டுறவுத்துறையில் ஒரு நூற்பு ஆலையும் நார்தொழிற்சாலைகளும்- அரிசி மாவுமில்களும் உள்ளன. இங்குப் புளியமரங்கள்- தென்னை-எண்ணெய்-வித்துக்கள்- அதிகம் விளைய வாய்ப்புண்டு. அந்த மூலப்பொருட்கள் கொண்ட தொழிலகங்கள் தொடங்கினால் நல்ல பலன் தரும்.

பொதுவாக இந்த மாவட்டத்தில் கனிவளம் (Minarals) கனி வளம் (Fruits) பாத்திர உற்பத்தித் தொழில்கள், நூற்பு ஆலைகள், எலெக்டிரிகல்ஸ் & எலெக்டிரானிக்ஸ், நார்தொழில்கள் மற்றும் கயிறு, சாகோ தொழிற்சாலைகள், எண்ணெய் ஆலைகள் பால்- பால்தொழிற்பொருட்கள் உற்பத்தி ஆலைகள்- பட்டு- பட்டு நூல் முறுக்கேற்றுதல் பட்டு நெசவு- காகிதத் தொழிற்சாலை- கண்ணாடித் தொழிற்சாலை-சிமெண்ட் தொழிற்சாலை-மண்பாண்டத்தொழிற்சாலைகள்- தோல் பதனிடுதல்-மாடர்ன் ரைஸ் மில்-ரசாயன தொழில்-ஆடை தயாரிப்பு- ஆக எண்ணற்ற தொழில்கள் தொடங்க ஏற்புடையதாக இம்மாவட்டம் இருந்தாலும் தொழில் தொடங்க வேண்டும் என்ற மனநிலை- ஆர்வம்- தொழில் நுட்பம், போதிய மூலதனமில்லாமை- கூட்டுத்தொழிலில் நாட்டமின்மை-பயம்-அதிர்

உழைப்புக் கொள்ளாமல் சுலபமாகப் பணம் செய்யும் ஆர்வம்-முதலிய இயலாமை-களால் இம்மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்- அதிகமாகத் தொழில் துறையில் முதலீடு செய்ய முன்வராதது வருத்தத்தினை தந்தாலும்- ஒரு சிலராவது முன்வந்து வழி காட்டிகளாக இத்துறையில் விளங்குவது மன நிறைவாக உள்ளது. வெளி மாவட்டத்தினர் வெளிமாநிலத்தவர்கள் வந்து இங்குத்தொழில் தொடங்குவதில் எந்தச்சிரமும் இல்லை. மேலும் தருமபுரி மாவட்டத்தில் ஒசூர் வட்டத்தை தவிர மற்ற பகுதிகளை தொழில்துறையில் பின்தங்கிய பகுதிகள் என அரசு தற்போது அறிவித்து இப்பகுதியில் தொழில் தொடங்குவோருக்கு 15% மாநிலம் வழங்கப்படுகிறது. அரசும்-வங்கிகளும் மனமுவந்து உதவிக்கரம் நீட்டுமேயானால் புதிய தொழில்கள் நிறைய உருவாகி தொடங்கிய தொழில்கள் நலிவுறாமல் செழித்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

<u>புதிய தொழில் உருவாக்குவோம்- உருவாக்கிய தொழிலை வளர்ப்போம்.</u>

என்பதே இம்மாவட்டத்தின் இன்றைய முழக்கம்.

"எத்தனைசாமி வந்தாரோ எத்தனைசாமி போனாரோ
அத்தனைசாமி ஒன்னா சேர்ந்து ரத்தனசாமி
ஆனாரோ'

என்ற பாடலுக்கு உரியவராக பல்வேறு தரப்பு மக்களிடையே தொழில்துறை வளர்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைப்பில், இம்மாவட்டம் தொழில் வளம் மிக்கதாக மாறுகிறது என்பதில் ஐயமில்லை.

* * *

AGRARIAN DISTRESS IN BARAMAHAL TERRITORY - 1790-1816

Prof. K.A.Arumugam,
Dept. of History,
Sri Vasavi College,
Erode 638 316

Under the sharing system of Hyder and Tippu, the lands were given to Amildars, patels on lease. Both patels and amildars left the peasants with a bare subsistance. The burden of heavy taxations, inefficient administration tell upon in peasants. The ryots were greatly impoverished.

When Col.A.Read took charge, he is expected to restore the sense of security and to build up a simple but effective revenue administration Col.Read introduced the ryotwari system and the peasants were able to concentrate on the improvement of the land.

After the transfer of Col.Read there was a confushion in the revenue administration. The revenue settlement of cockburm made the rich and poor peasants alike destitute and desperate. The ryots of ottor, Denkanikottah, Balaghat revolted and resisted.

The Government took measures to alleviate their just grievances but they were unable to solve fully. Discontent peasants showed their disobedience to the Government then and there. This is evaluated in this operation.

****

அதியமான் கோட்டையின் இதிகாச ஓவியங்கள்.

****
****

சேலம். பா. அன்பரசு, எம்.ஏ., எம்.எட்., டிப்-இதழியல்.,
30, சென்ன கிருஷ்ணன் தெரு,
சேலம் - 636 002.

சேலம் - தருமபுரி நெடுஞ்சாலையில், தருமபுரியிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பழஞ்சிறப்பு வாய்ந்த அதியமான் கோட்டை - அன்றும் - இன்றும்.

கோட்டையின் மேற்குப் பக்கம் உள்ளது சென்னராயப் பெருமாள் கோயில். கோயிலின் அமைப்பும், கோயில் மகாமண்டபத்தின் விதானத்தில் தீட்டப்பட்டுள்ள இதிகாச ஓவியங்களும், சிறு சிறு கட்டங்களில் தீட்டப்பட்டுள்ள இராமாயணக் காட்சிகளுக்குத் தெலுங்கு மொழியில் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவ்வோவியங்கள் தருமபுரிக் கோட்டை மல்லிகார்ஜுன சுவாமி அம்மன் சன்னதியின் உப பீடத்தில் அமைந்துள்ள இராமாயணச் சிற்பங்களை நினைவு படுத்துகின்றன.

சென்னராயப் பெருமாள் கோயில் மகா மண்டப விதானத்தின் நடுப்பகுதியில் நெடுக வரையப் பட்டுள்ள திருமாலின் விசுவரூப தரிசனம் காணத்தக்கது.

இவ்வோவியங்களின் காலம், தெலுங்கில் எழுதப்பட்டுள்ள விளக்கங்கள் - இவற்றைப்பற்றி ஆய்வு செய்கிறது இக்கட்டுரை.

***

THE EARLIEST MEGALITHIC POTTERIES FROM COIMBATORE REGION IN THE COLLECTION OF MADRAS MUSEUM

BY

Dr.N. Devasahayam,
Curator, Anthropology Section,
Government Museum, Madras

ABSTRACT:

Before the advent of the systematic stratigraphical excavations in India by the concerned competent authorities till the Independence, it was J.W.Breeks (an administrator) laid the foundations for the revelation of the Megalithic monuments in South India by publishing his book "An Account of the Primitive Tribes and Monuments of the Niligiris" in 1873 and excavating the artistic potteries in the Nilgiris in 1878. Thus these earliest Megalithic evidences have been found their way into the galleries of the Madras Museum.

Continuing the footsteps of Breeks, the other such District Officers, namely Stoney (1902-19 Nos. of potteries) Stokes (1934-23 Nos. of potteries) and Biddulph (1946-25 Nos. of potteries) sent their pottery antiquities from Coimbatore to the Museum.

These collections from the urns reveal that Coimbatore is especially rich for its beautiful, elegant, artistic, painted and decorated potteries (Russet coated) with fine finish. These collections are in no doubt indicate the high standard of the potter's craft in South India at that time. However, they form the earliest source material for the researchers in the field of archaeology and anthoropology.

தருமபுரி மாவட்டத்தில் மாட்டுச் சந்தை

பேராசிரியர். கோவிந்தராசன், எம். ஏ.,
பொருளியல் துறை,
அரசு கலைக் கல்லூரி,
தருமபுரி-5.

இது தருமபுரி மாவட்டத்தில்

தற்பொழுது நடைபெறும் மாட்டுச் சந்தைகள்

நிகழும் இடம், வணிக முறை, சுழிகள், மச்சங்கள்,

விலையில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்,

விற்பனையில் நடைபெறும் சாங்கியங்கள்,

தரகு பற்றிய வழக்குச் செய்திகளைக்

குறிப்பிட்டு விளக்குவது.

ஏகாம்பரப்பூபனும் ஏகாம்பரநாதனும்.

ச. கிருஷ்ணமூர்த்தி,
தொல் பொருள் அலுவலர்,
சிதம்பரம்.

காஞ்சி ஏகாம்பரநாத ஈஸ்வரனை எண்ணற்ற புலவர்கள் போற்றி உள்ளனர். கி.பி.18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த முத்துப்புலவன் என்ற தமிழ்ப் புலவனும் இவரைப் பாடி உள்ளார். இப்புலவர் பெருமான் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டத்தை அறிந்தவராக உள்ளார். வாணிகம் செய்யவந்த ஐரோப்பியர்களைக் குறிப்பிடும்போது காஞ்சியில் வாழ்ந்த வாணிப மரபில் வந்த ஏகாம்பர பூபனைப் பாடியுள்ளார். ஏகாம்பரனை கப்பல் வாணிபம் செய்தவனாகவும் ஐரோப்பியர் மனமகிழ் வாணிபம் செய்தவனாகவும் பார்க்கிறோம். உறாலந்து நாட்டவரை உலாந்துகாரர் என்றும், ஆங்கிலேயரை இங்கிலீசுகாரர் என்றும், வேறொரு ஐரோப்பியரை வெள்ளைக் கலாந்திரி என்றும் குறிப்பிடுகிறார்.

புலவரின் தந்தை பெயர் பச்சை முத்து ஆகும். இவரும் வாணிய மரபில் வந்தவராகத் தோன்றுகிறது. தருமபுரி நகரில் கி.பி. 1776-ல் வாழ்ந்த கவிதீர்த்த வாத்தியார் என்ற தமிழ்க்கவிஞரையும் அவருக்கு வாணிய வைசியர் வழங்கிய தானத்தையும் குறிப்பிடும் ஓலைச்சுவடி தருமபுரி அருங்காட்சியகத்தில் உள்ளது.

தமிழ்க் கவிஞர்கள் தருமபுரியிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பது மேற்படி சான்றுகள் உறுதியாகின்றது.

ஏகாம்பர பூபனைப் பாடுமுன் முத்துப்புலவன் காஞ்சி ஏகாம்பரநாதனிடம் சென்று 100 பொன் தருமாறு வேண்டுகிறார். இறைவனோ தாம் ஏழை என்றும் தமக்கு ஏது பொன் என்றும் கூறிப் புலவர் மறுத்துரைக்க நகைச்சுவையாகப் பாடல் அமைகிறது. 186 வரிகளை உடைய ஆசிரியப்பாவில் இந்நூல் அமைகிறது. அச்சில் வராதது இந்த நூல்.

பாராமஹால் என்னும் தர்மபுரியின் பொருளாதார நிலை (கி.பி. 1792 - 1800).

-அ. மோகன்ராம், எம்.ஏ., (பி.எச்.டி),
விரிவுரையாளர் - முதுநிலை,
வரலாற்றுத் துறை,
அரசு கலைக் கல்லூரி,
தருமபுரி - 636 705.

சுருக்கம்:-

மூன்றாவது மைசூர்ப் போரில் (1790-92) ஆங்கிலேயரிடம் தோல்வியுற்ற திப்பு சுல்தான் தன்னை வெற்றி கொண்ட ஆங்கிலேயருக்குப் போர் நஷ்ட ஈட்டுத் தொகையோடு தனது ராஜ்யத்தின் பாதிப் பகுதியையும் கொடுக்க வேண்டியவனானான். இவ்விதமாக, 1792 ஆம் ஆண்டு திப்புவுக்குச் சொந்தமான தமிழகத்தின் பாராமஹால் உள்ளடங்கிய சேலம் மாவட்டம், திண்டுக்கல் பகுதிகளும்; மலபார்ப் பகுதியும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் வந்தன.

1792 - ஆம் ஆண்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி நிர்வாகத்தின் கீழ் பாராமஹால் என்னும் தர்மபுரி வந்தது முதற்கொண்டு 1800 வரையிலான தொடக்க காலத்தில் அப்பகுதி கொண்டிருந்த பொருளாதார நிலையைப் பற்றி மன்றோ முதலான ஆங்கில அதிகாரிகளது குறிப்புகள் துணைகொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

*****
/*****/

SOCIAL CONDITION OF DHARMAPURI DISTRICT DURING THE FREEDOM STRUGGLE IN TAMILNADU

*****

Dr.C. MOOKKA REDDY,
Sri Vasavi College,
Erode

Dharmapuri district is a land of fertilizer for cultivating the Freedom Movement. Even from the very beginning of the Sangam Age, Dharmapuri district was a tresspass to the foreigners to enter into Tamil country. This soil found a number of invasions, which made the people to show their heroism in the fighting of their lives every now and then. In later days, during the reign period of British, they rose up to their highest level for the 'Independence'. A number of leaders are the come out of this notable district. For example, we see Mr Rajagopalachari who was a man of philosophy, feedom and above all, a social-minded statesman. He was one of the pillars of the freedom fighters in India. Similarly a number of persons-men and women-rose for the independence of India. We have to trace out and honour them. As a first step, I have presented here a few personalities. The society was so set up and their performances are to be recorded for the future generations. This is one of such efforts which is taken now; It will lead the research scholars to enter into the society to trace our past history.

& £ &

ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை, தருமபுரி.

1989-90 ஆம் ஆண்டுப் பணித் திட்டம்
(வரலாறு தொடர்பானவை)

1. கர்னல் ரீடு அறிக்கை மற்றும் கருத்தரங்கம் சார்ந்த செய்திகளை நூலாக்கி அச்சாகவோ அல்லது நகலச்சாகவோ (Mimiograph) வெளியிடுதல்;

2. தருமபுரி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டைகள், சிற்பங்கள், கோயில்கள், மசூதிகள், கிறிஸ்தவ ஆலயங்கள், ஜைன, பௌத்தச் சின்னங்கள், ஆங்கிலேயரின் கட்டிடக் கலைச் சின்னங்கள், சுற்றுலாவிற்கு இயைந்த இயற்கைக் காட்சிகள், அணைக்கட்டுகள் போன்றவற்றைத் தொகுத்து, தொகுதி தொகுதியாக வெளியிடுதல்;

3. ஒன்றிய அளவில் சமூக, பொருளாதார, வரலாற்றுக் கருத்துக்களைத் தொகுத்து நூலாக வெளியிடுதல். முதல் நிலையில் சூளகிரி மற்றும் அரூர் ஒன்றியம் பற்றிய வரலாற்றை எழுதுதல்;

4. தருமபுரி மாவட்டத்தில் சிறப்பு வாய்ந்த இடங்களை ஒலி-ஒளிக் காட்சிப் படமாக்குதல்; அவற்றை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டுமகிழ ஏற்பாடு செய்தல்.

செலவு மதிப்பீடு:

1. கருத்தரங்க நூல் 100 பக்கம் 1000 படிகள் மதிப்பீடு ரூ.6000/-

2. தருமபுரி மாவட்ட அறிமுகம்;
   தலைப்பு: நம் நாடு-தருமபுரி மாவட்டம்.

3. சூளகிரி மற்றும் அரூர் ஒன்றிய வரலாற்று நூல் (நகல் அச்சு நூல்/ அச்சு நூல்) ஒவ்வொரு ஒன்றியத்திற்கும்
   செலவு மதிப்பு ரூ.7000/- சுமார்.

4. ஒலி-ஒளி நிழற்படம்:
   செலவு மதிப்பீடு சுமார் ரூ.20,000/-

1989-90 ஆம் ஆண்டு வரலாற்று பணித் திட்டக் குழுவினர்;

<u>கல்விக் குழு:</u>

1. டாக்டர்.எம்.இராஜேந்திரன்,எம்.ஏ.,பி.எச்டி.,
2. திரு.செல்வராஜ், மாவட்ட தொல் பொருள் ஆய்வு அலுவலர்,தருமபுரி.
3. டாக்டர் எஸ்.சுப்பராயன், பி.எஸ்சி.,பி.எல்.,எல்.எல்.டி.,
4. கவிஞர்.தமிழ்நாடன், சேலம்.
5. பேராசிரியர்.எம்.எம்.மணி,எம்.ஏ.,எம்.பில்.,

<u>ஆலோசனைக் குழு:</u>

1. பேராசிரியர்.பேசு.கோவிந்தராசன்,எம்.ஏ.,எம்.பில்.,
2. திரு.ஏ.விமலன்,ஏ.இ.,ஏ.எம்.ஐ.இ.,டி.ப.(லண்டன்).,
3. திரு.என்.பழனிசாமி, பொருளாளர், தருமபுரித் தமிழ்ச் சங்கம்.
4. திரு.எம்.வடிவேல்,பி.ஏ., செயலர், சிறுதொழில் வளர்ச்சி.
5. திரு.பாலகிருஷ்ணன், முன்னாள் ஒன்றிய ஆணையாளர், ஊத்தங்கரை.
6. திரு.கிருஷ்ணன்,பி.ஏ.,பி.எல்.,
7. திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் மாவட்டக் கல்வி அலுவலர்.

<u>தொடர்பாளர்:</u>

1. திரு.வெ.இராமலிங்கம்,எம்ஏ.,பி.ஜி.எல்.,
இணைப்பாளர், நேரு இளைஞர் மையம், தருமபுரி.
2. திரு.பிச்சைப் பிள்ளை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
ஊராட்சி வளர்ச்சி, தருமபுரி.
3. திரு.எஸ்.கிருஷ்ணன், மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக உதவியாளர்,
மக்கள் தொடர்பு.

<u>நிர்வாகப் பொறுப்பாளர்:</u>

பேரா.கி.கோவிந்தன்,எம்.ஏ.,
திரு.[illegible] குருராவ்,
திரு.பி.குலோத்துங்கன்,
திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி.

//=====================//

திருமதி. எம். ஆர். காளியம்மாள்,
தலைவர்,
ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை,
தருமபுரி.

இந்த விழாவின் தலைவர் அவர்களே! நூலை வெளியிட்டுச் சிறப்பித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! கருத்துரை வழங்கிய மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்களே! பேராசிரியர்களே! அறிஞர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! வணக்கம்.

உலக இளைஞர் ஆண்டினை ஒட்டி — இந்த மாவட்ட இளைஞர் மகளிர் முன்னேற்றத்தை லட்சியமாகக் கொண்டு ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளையை நானும், திரு. பெ. பொன்னுசாமி அவர்களும் தொடங்கினோம். அறக்கட்டளையின் பணிகளில் ஒன்று இந்த மாவட்ட வரலாற்றை ஆராய்வது; அதற்கு உதவி புரிவது; அதில் ஈடுபட்டுள்ளவர்களைப் பாராட்டுவது. இந்த நோக்கத்திற்கேற்ப, இன்று நூல் வெளியீட்டு விழாவும் கருத்தரங்கமும் நடைபெற்று வருகிறது. தருமபுரி மாவட்டத்தின் வெள்ளி விழாவின் கால்கோள் விழா இது. இந்த அரிய நாளில், இந்த இனிய விழாவினைக் கொண்டாட உதவிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். இரத்தினசாமி, ஐ. ஏ. எஸ். மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கு. சண்முகநாதன், எம். ஏ., ஆகிய இருவருக்கும் அறக்கட்டளையின் சார்பில் என் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உரியதாக்குகின்றேன். அவர்கள் பல ஆண்டு வாழ்ந்து பல நலமும் பெற்றுச் சிறப்படைய வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

கர்னல் ரீடு — நூலை வெளிக் கொண்டுவர கவிஞர் தமிழ்நாடன் செய்துள்ள பணி மிக முக்கியமானது; கடினமானது. அவரை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். அவர் பணிக்கு உதவிய திரு. குலோத்துங்கன் அவர்களுக்கு அறக்கட்டளை சார்பில் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் பங்கேற்ற டாக்டர் எஸ். சுப்பராயன், அறிஞர்கள் கொடுமுடி சண்முகம், பேராசிரியர்கள், தொல் பொருள் ஆய்வாளர்கள், புலவர்கள் மற்றும் அறிஞர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் அறக்கட்டளை சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறக்கட்டளையின் வரலாற்றுப் பணிக்குத் தொடர்ந்து உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி, நீங்கள் பல்லாண்டு இனிது வாழ்க, என வாழ்த்திப் பாராட்டுகின்றேன். இந்த நூலை எழுதத் தூண்டி, உருவாக்கி வழங்கத் துணை செய்து கருத்தரங்கினை அமைத்தும், நாட்டு வரலாற்றை அமைக்கும் தணியா ஆர்வம் கொண்டு விளங்கும் அறக்கட்டளையின் கௌரவ இயக்குநர் திரு. தி. கோவிந்தன் அவர்கள் பணியைப் பாராட்டுகிறேன். அவர் தொடர்ந்து இந்தப் பணியில் வெற்றிப்பெற வாழ்த்துகின்றேன். அறக்கட்டளையின் பணிகளில் இன்முகத்தோடு ஈடுபட்டு உதவி வரும் திரு. ஏ. விமலன் அவர்கள் உதவியும் ஈடுபாடும் தொண்டும் மிக அதிகம். அவர்கட்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

திரு. ஏ. விமலன், டிப். ஏ. இ., எ. எம். ஐ. இ. (இலண்டன்),
தருமபுரி.

தலைவர் அவர்களே ! அறிஞர்களே ! பெரியோர்களே ! வணக்கம்.

தருமபுரி மாவட்டத்தின் வரலாற்றை – இம்மாவட்டத்தின் கலைச் சிறப்பை – கலைஞர்களை – சுதந்திரப் போராட்டத் தியாகிகளை – ஞானிகளை இம்மாவட்டத்தில் உள்ள எல்லா மக்களும் அறிய வேண்டும். அதன் மூலமாக இம்மாவட்டத்தவர் 'வரலாற்று விழிப்புணர்வும், வரலாற்று மன உணர்வும் பெறல் வேண்டும்.', என்ற உயர்ந்த குறிக்கோளைக் கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் தந்தும், கருத்துக்கள் வழங்கியும் சிறப்பித்த உங்கள் அனைவரையும் – இம்மாவட்ட மக்கள் சார்பில் – அறக்கட்டளை சார்பில் – என் சார்பில் – மனமாரப் பாராட்டுகிறேன்; போற்றுகின்றேன். இந்த மாவட்டத்தின் வரலாற்றுப் பணிகளுக்கு வடிவமைத்துத் தந்த வழிகாட்டும் மாவட்ட ஆட்சித் தலைவர். திரு. ஆர். இரத்தினசாமி, இ. ஆ. ப., மற்றும் இம்மாவட்டத்தின் பண்பாட்டுக் கோலத்தைப் பாதுகாக்க முயன்று உழைக்கும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கு. சண்முகநாதன், எம். ஏ., – இவர்கள் ஈடுபாடும், இசைவும் வரலாற்றுப் பணிக்கு ஊற்றுக் கண்கள். இத்தகைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரத்தினசாமி, இ. ஆ. ப., அவர்கட்கும், கண்காணிப்பாளர் திரு. கு. சண்முகநாதன், எம். ஏ., அவர்கட்கும் என் உளமான பாராட்டுக்கள்.

பாராட்டுரை வழங்கிய வழக்கறிஞர் டாக்டர். சுப்பராயன் (SSC BL LLD) அவர்கட்கும், கர்னல் ரீடு அவர்கள் அறிக்கை நூலைக் கொண்டுவரப் பாடுபட்ட கவிஞர் தமிழ்நாடன் அவர்கட்கும், கருத்தரங்கில் பங்கேற்ற பொறிஞர். திரு. கொடுமுடி சண்முகம் அவர்கட்கும், பேராசிரியர்கள் திரு. எம். இராஜேந்திரன், திரு. கே. ஏ. ஆறுமுகம் (ஈரோடு), திரு. ஏ. மோகன்ராம், திரு. என். கோவிந்தராசன், தொல்பொருள் ஆய்வுத் துறை திரு. எஸ். தேவசகாயம், திரு. எஸ். கிருஷ்ண மூர்த்தி புலவர்கள் செ. இராசு, பெ. வேலு, மற்றும் சேலம் அன்பரசு ஆகியோர்கட்கும், சிறு தொழில் சங்கத் தலைவர் திரு. எம். வடிவேல் அவர்கட்கும், என் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள். பேரா. சி. கோவிந்தன் அவர்கட்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

அறக்கட்டளை தலைவர் திருமதி. எம். ஆர். காளியம்மாள், செயலர் திரு. பெ. பொன்னுசாமி, பி. ஏ., பி. எல்., மற்றும் நேரு இளைஞர் மைய இணைப்பாளர். திரு. வெ. இராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள், திட்ட அலுவலர்கள், ஆகியோர்கட்கு என் பாராட்டுகள் உரிய.

இந்தப் பணியில் முழு ஈடுபாடு கொண்டு ஆர்வத்துடன் உதவிய திரு. குலோத்துங்கன் அவர்கட்கும், சமூகத் தொண்டர்கட்கும்